## 2.3 1998–99 – ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ரூ.35.00 இலட்சம் மற்றும் திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டி நெறிமுறைகள்

ஊரக வளர்ச்சி (மதி1) துறை

அரசாணை (நிலை) எண்.99 நாள் : 21.05.1998

படிக்க :

1. அரசு ஆணை(நிலை) எண்.249, நிதி(ஆதாரம்), துறை நாள்.12.05.1997
2. அரசு ஆணை(நிலை) எண்.84, திட்டம் மற்றும் வளர்ச்சி (மா.தி2), துறை நாள்.14.07.1997
3. அரசு (நிதித்துறை) கடிதம் எண்.87147/ஆதாரங்கள்/97–1/நாள்.09.12.1997
4. அரசு ஆணை(நிலை) எண்.58, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள்.19.03.1998
5. அரசு ஆணை (நிலை) எண்.98, ஊரக வளர்ச்சித்துறை, நாள்.21.05.1998

**ஆணை**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 1997–98ம் வருடம் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களின் தொகுதிகளை மேம்படுத்துவதற்கு ஒரு தொகுதிக்கு ரூ.25 இலட்சம் வீதம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து ரூ.58.75 கோடி ஒதுக்கீட்டில் நிதி வழங்கப்பட்டது. 1998–99ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்த பின் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொகுதி ஒன்றுக்கு ரூ.35 இலட்சம் என உயர்த்தி அறிவிப்பு வெளியிட்டதைத் தொடர்ந்து ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.35 இலட்சம் (ரூபாய் முப்பத்தைந்து இலட்சம் மட்டும்) வீதம் மேலே கண்ட அரசாணை ஐந்தில் 235 தொகுதிகளுக்கும் ரூ.82.25 கோடி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.35 இலட்சம் அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கும் பணிகளை நிறைவேற்றுவதற்கு சென்னை மாநகராட்சி எல்லைக்கு மாநகராட்சி ஆணையரிடமும், சென்னை மாநகராட்சி தவிர மற்ற அனைத்து மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமும் இந்த நிதி வழங்கப்படும். இதனை சென்னை மாநகராட்சி ஆணையரும் மற்ற மாவட்டங்களின் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கும் பணிகளை, திட்டத்தை இணைந்து செயல்படுத்தும் துறைகள் மூலம் செய்ய வேண்டும்.

3. (i) நிதியை பெற்றுக் கொள்ளல், திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தல்.

இத்திட்டத்திற்கு அரசு விடுவிக்கும் தொகை பார்வை 2ல் கண்ட அரசாணைக்கு இணங்க கீழ்கண்ட விதிமுறைகளின்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் (சென்னை நீங்கலாக) சென்னை மாநகராட்சி ஆணையருக்கும் பணிகளை செய்து முடிக்க வழங்கப்படும்.

ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களில் இருக்குமானால், அந்தந்த மாவட்டங்களில் உள்ள கிராமங்களுக்கு எந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர் பணியினை தேர்வு செய்கின்றாரோ அந்த அளவிற்கான தொகையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பிரித்து வழங்குவார்.

(ii) திட்டச் செயல்பாடு.

மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒப்பளிக்கப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற திட்டங்கள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணிகள் துறை, பொதுப்பணித்துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சிநிர்வாகத்துறை, பேரூராட்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம், போன்ற துறைகள் மூலம் செயல்படுத்தப்படும்.

(iii) ஒப்பந்தப்புள்ளி கோருதல்.

அனைத்துப் பணிகளும் பகிரங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அரசு விதிமுறைகள்படி அந்தந்தத் துறைகள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(iv) பணிகளைத் தேர்வு செய்தல்.

சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் தேர்வு செய்யக்கூடாத பணிகள் பிற்சேர்க்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. இவைகள் தவிர மற்றப் பணிகளை ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், ஒவ்வொரு தொகுதிக்கும் ரூ.35 இலட்சத்திற்கு மிகைபடாமல் அவர்கள் விருப்பப்படி திட்டங்களை தேர்வு செய்து கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் திட்டப் பணிகளை தேர்வு செய்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பார். மாவட்ட ஆட்சித் தலைவர் அத்திட்டங்களை நிறைவேற்றுவார். ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் அரசுக்கு அறிக்கை அனுப்புதல், கணக்கு மற்றும் தணிக்கை முறைகள் போன்றவற்றை கடைப்பிடிப்பதற்காக மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்திற்கான வழிமுறைகள் திட்டப் பணிக்கான உச்ச வரம்பு ரூ.10 இலட்சம் நீங்கலாக மற்ற வழிமுறைகளை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்கும் பின்பற்றப்பட வேண்டும்.

(v) திட்டப் பணிகளை ஆய்வு செய்தலும் மேற்பார்வையிடுதலும்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டங்களை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளே கண்காணிக்கும். ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்தப்படும் திட்டத்தை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் கண்காணிப்பார். இத்திட்ட செயல்பாடுகள் குறித்த மாதாந்திர அறிக்கையை மாவட்ட ஆட்சியர் அடுத்து வரும் மாதங்களில் 5–ம் நாளுக்குள் மாநில திட்டக்குழுவிற்கு அனுப்பி வைப்பார். மேலும், சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்களும், ஊரக வளர்ச்சித் துறையைச் சேர்ந்த அலுவலர்களும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு மாதாந்திர அறிக்கையை அடுத்து வரும் மாதங்களில் 5–ம் நாளுக்குள் அனுப்பி வைக்க வேண்டும். ஊரக வளர்ச்சி முகமையைச் சேர்ந்த அரசு அலுவலர்களும், ஊரக வளர்ச்சி இயக்குநரும், ஊரக வளர்ச்சித் துறை அரசுச் செயலரும் இத்திட்ட செயல்பாட்டை பார்வையிட்டு அவ்வப்போது ஆய்வு செய்வார்கள்.

(vi) மேற்பார்வையிடுதல் மற்றும் துறைக்கான செலவு (சென்டேஜ் செலவு)

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் கட்டிட மையம் போன்ற துறைகள் மேற்கொள்ளும் பணிகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு மாவட்ட பரவலாக்கப்பட்டத் திட்டப் பணியினுள் அடங்கும். அரசுத் துறைகளான பொதுப்பணித்துறை. நெடுஞ்சாலைத்துறை மற்றும் ஊரகப் பணித் துறை, ஊரக வளர்ச்சித்துறை, நகராட்சி நிர்வாகத்துறை, பேரூராட்சித் துறை போன்றவைகளுக்கு மேற்பார்வையிடுதல் செலவு மற்றும் கட்டணச் செலவு வழங்கப்பட மாட்டாது.

(vii) பொது.

கணக்கு மற்றும் தணிக்கை, மேற்பார்வை மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு அரசாணை (நிலை) எண்.148, திட்டம் மற்றும் வளர்ச்சி (மாதி) நாள்.27.08.1993 மற்றும் அரசாணை (நிலை) எண்.105, திட்டம் மற்றும் வளர்ச்சி (மாதி) நாள்.22.08.1995 ஆகிய அரசு ஆணைகளில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.1958/எப்.எஸ்.பி./98/ நாள்.15.05.1998 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்